செய்திக்குறிப்பு எண்: 92 நாள்: –18.11.2009

**தமிழக இரயில்வே திட்டங்கள் மீது தனிக்கவனம் செலுத்தி**
**கூடுதல் நிதி ஒதுக்கிட**
**மத்திய இரயில்வே அமைச்சர் செல்வி மம்தா பானர்ஜிக்கு**
**முதலமைச்சர் கலைஞர் கடிதம்**

–––

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் இரயில்வே திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை விரைந்து நிறைவேற்றிட வலியுறுத்தி முதலமைச்சர் கலைஞர் மத்திய இரயில்வே அமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி அவர்களுக்கு நேர்முகக் கடிதம் எழுதியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:–

"தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டுவரும் முக்கிய பல இரயில்வே திட்டங்கள் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமையால் திட்டப்பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக, அகல இரயில்பாதையாக மாற்றும் திட்டங்களைப் பொறுத்தவரையில் 2009–2010ஆம் ஆண்டில் 240 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டங்களைக் குறித்த காலத்தில் நிறைவேற்றுவதற்கு மேலும் 280 கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது. மிக முக்கியமான மயிலாடுதுறை–திருவாரூர்–காரைக்குடி–திருத்துறைப்பூண்டி, மற்றும் திருக்குவளை வழியாக நாகப்பட்டினம்–திருத்துறைப்பூண்டி அகல இரயில்பாதைத் திட்டங்கள் போதிய நிதி ஒதுக்கீடு இன்மையால் முடிவடையாமல் நிலுவையில் உள்ளன.

அதே போல, இரட்டை இரயில் பாதைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 2009–2010ஆம் ஆண்டில் 112 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பணிகள் நடைபெறுகின்றன. செங்கல்பட்டு –விழுப்புரம் மார்க்கத்தை இரட்டை இரயில் பாதையாக்கும் திட்டத்திற்கு மட்டும் இந்த ஆண்டில் 77 கோடி ரூபாய் கூடுதல் நிதி தேவைப்படுகிறது.

இதேபோன்ற நிலை, புதிய இரயில் பாதைகளை அமைப்பதிலும் ஏற்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, 85 கி.மீ. நீளமுள்ள கரூர் – சேலம் புதிய இரயில் பாதைத் திட்டம் தமிழகத்தில் நிறைவேற்றப்படுகிறது. நடப்பு 2009–2010ஆம் ஆண்டில் 36 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இதுவரை இத்திட்டத்திற்கு 34 கோடி ரூபாய் ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டதிற்கு இந்த ஆண்டில் 140 கோடி ரூபாய் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் உரிய முன்னேற்றம் ஏற்படவேண்டுமெனில் மேலும் 104 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் மந்தநிலை ஏற்பட்டுள்ளதாக அறிகிறேன். இதேபோல, திண்டிவனம்–திருவண்ணாமலை, திண்டிவனம்–நகரி, அத்திப்பட்டு–புத்தூர், ஈரோடு–பழனி, மாமல்லபுரம் வழியாக சென்னை கடலூர் ஆகிய 5 புதிய திட்டங்களிலும் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இத்தகைய சூழ்நிலையில், தமிழகத்திற்கான இரயில்வே திட்டங்கள் மீது தனிக்கவனம் செலுத்தி தேவையான நிதி ஒதுக்கீடுகளைச் செய்து பணிகளை விரைந்து முடித்திட உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு மத்திய இரயில்வே அமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் கலைஞர் தமிழக இரயில்வே திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்களை விரைந்து முடித்திட உதவிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

****************

வெளியீடு:இயக்குநர்,செய்தி க்கள் தொடர்புத்துறை, சென்னை.